**பாடம் 9**

# போதகர் பவுலின் வேண்டுகோள்



**மனன வசனம்**

**சகோதரரே, என்னைப் போலாகுங்கள் என்று உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; நான் உங்களைப் போலுமானேனே. கலா 4:12 .**

**ஆராய்ச்சிக்கு**

**கலா 4:12-20; 1கொரி 11:1; பிலி 3:17; 1கொரி 9:19-23; 2கொரி 4:7-12.**

ஆகஸ்ட் 19 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

கலாத்தியரிடம் வார்த்தைகளை விழுங்கி விழுங்கி பவுல் பேசவில்லை; கண்டிப்புடன் பேசுகிறார்; தான் ஸ்தாபித்த சபையின் ஆவிக்குரிய நலனில் அவருக்கு இருந்த அக்கறை அதில் வெளிப்பட்டது. கலாத்தியர் மத்தியில் எழுந்திருந்த முக்கிய வேதாகமப் பிரச்சனையை முன்னிட்டு, அவர்களுக்கு நிருபம் எழுதியிருந்தார்; சரியான உபதேசத்தின் முக்கியத்துவத்தை அதிகமாகச் சுட்டிக்காட்டினார். நம் நம்பிக்கை முக்கியமானது; உபதேசம் சரியானதாக இருப்பதும் முக்கியம். இல்லையென்றால், இத்தனை வைராக்கியத்தோடு உறுதியோடு பவுல் நிருபம் எழுதியிருக்கமாட்டார். நற்செய்தியைப் பொறுத்த வரையில் 'நாம் என்ன நம்புகிறோம்' என்பது மிகவும் முக்கியமானது.

கலா 4:12-20 இலும் பவுல் தொடர்ந்து போதிக்கிறார்; ஆனால் அவருடைய தொனியில் சற்று மாற்றம் தெரிகிறது. கலாத்தியர் தங்கள் தவறுகளிலிருந்து திரும்பவேண்டுமென விளக்கமாகவும் வேத நுணுக்கத்தோடும் பேசிவந்தவர், இப்போது ஒரு போதகனாக, தனிப்பட்ட விதத்தில் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறார். பொய்ப்போதகர்களுக்கு கலாத்தியர்மேல் மெய்யான அக்கறை எதுவுமில்லை. ஆனால், வழிதப்பிப்போன தன் மந்தைமேல் ஒரு நல்ல மேய்ப்பனுக்குள்ள அக்கறையும், கவலையும், நம்பிக்கையும், அன்பும் பவுலிடம் காணப்பட்டன. தவறான வேதாகமப் போதனையைச் சரிசெய்வது மட்டுமல்ல; தனக்குப் பிரியமான அவர்களுக்கு ஊழியம்செய்யவும் முயன்றார்.

2017, ஆகஸ்ட் 26 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

***கலா 4:12-20 இல், பவுல் செய்தியின் சாராம்சம் என்ன?***

---

வச 12 இல் பவுல் கொடுக்கும் வேண்டுகோளில் முதலாவதாக, அவருடைய உள்ளத்தின் பாரத்தை அறிய முடிகிறது. 'என்னைப் போலாகுங்கள்' என்பதுதான் கலாத்தியருக்கு அவருடைய வேண்டுகோள். 'வேண்டிக்கொள்ளுகிறேன்' என்பதை 'மன்றாடுகிறேன்' என்றும் மொழிபெயர்க்கலாம். '**டியோமாய்**' எனும் அந்த கிரேக்க வார்த்தையானது அதிகமாகக் கெஞ்சி, அவர் கேட்டுக்கொள்வதாகத் தெரிவிக்கிறது. 2 கொரி 5:20; 8:4; 10:2. அதாவது, 'நான் உங்களிடம் பிச்சையாகக் கேட்கிறேன்' என்கிறார்.

பொய்யான வேதாகமக் கருத்துகள்மாத்திரம் பவுலை வருத்தவில்லை; தன் ஊழியத்தால் கிறிஸ்துவிடம் வந்தோரின் வாழ்வை எண்ணியே அவர் உள்ளம் வருந்துகிறது. ஒரு நண்பனிலும் மேலாக, அவர்களின் ஆவிக்குரிய தந்தையாக, அவர்களைத் தன் பிள்ளைகளாக நினைத்துப் பேசுகிறார். ஒரு தாயின் பிரசவ வேதனை போன்று, கலாத்தியர் குறித்து தான் கவலையடைந்ததாகக் கூறுகிறார். கலா 4:19. கலாத்தியச் சபையை நிறுவினசமயத்தில், தான் 'கர்ப்பவேதனை' அடைந்தது, அவர்கள் 'பத்திரமாகப் பிறப்பதற்குப்' போதுமானதாக இருந்ததாக நினைக்கிறார். ஆனால், இப்பொழுது அவர்கள் சத்தியத்தை விட்டுவிட்டார்கள். எனவே, அவர்களை மீண்டும் நல்வழிக்குள் கொண்டுவர, மறுபடியும் கர்ப்ப வேதனை போன்ற அனுபவத்தை அடைகிறார்.

***கலாத்தியரைக் குறித்து பவுல் கொண்டிருந்த நோக்கம் என்ன? அவர்களுக்காக, 'கர்ப்பவேதனை' அடைந்து, அவர்களில் அவர் எதிர்பார்த்த மாற்றம் என்ன? கலா 4:19.***

---

கருவின் குழந்தைகளென்று கலாத்தியரை முதலில் குறிப்பிட்டவர், இப்போது அவர்கள் கர்ப்பந்தரித்தவர்கள் என்கிறார். 'உருவாகு' என்பதற்கான கிரேக்க வார்த்தை, கருவளர்ச்சியைச் சுட்டிக்காட்டுகிறது. கிறிஸ்தவர்கள் எப்படி இருக்க வேண்டுமென்பதை இந்த உருவகத்தின்மூலம் பவுல் விளக்குகிறார். கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் தங்களிடம் விசுவாசம் இருப்பதாகச் சொன்னால் மாத்திரம் போதாது; கிறிஸ்துவைப்போலவே முற்றிலும் மாறிவிடவேண்டும். அவர்களிடம் பவுல் சிறுசிறு மாற்றங்களை எதிர்பார்க்கவில்லை. கலாத்தியரைப் பார்த்தால் கிறிஸ்துவைப் பார்ப்பது போன்று இருக்கவேண்டுமென்று விரும்பினார்.

கிறிஸ்துவின் குணம் என்னென்ன வழிகளில் உங்கள் வாழ்க்கையில் வெளிப்படுகிறது? உங்கள் வாழ்க்கையின் என்னென்ன அம்சங்களில் நீங்கள் இன்னமும் அதிகம் வளர வேண்டியது இருக்கிறது?

---

***கலா 4:12 இல் பவுல் சொல்லும் என்ன விஷயம் 1கொரி 11:1; பிலி 3:17; 2 தெச 3:7-9; அப் 26:28,29 வசனங்களிலும் பிரதிபலிக்கின்றன?***

கிறிஸ்தவர்கள் தன்னைப்போல் ஆகும்படி பவுல் ஊக்குவிக்கிறார். ஒவ்வொரு முறை அப்படிச் சொல்லும்போதும், விசுவாசிகள் நம்பத்தகுந்த ஒரு முன்மாதிரியாக தன்னைக் காண்பிப்பார். தெசலோனிக்கேய விசுவாசிகள் தன்னைப்போல் வேலைசெய்து பிழைக்கவும், பிறருக்குப் பாரமாக இராதபடிக்கும் 2 தெச 3:7-9 இல் கூறுகிறார். கொரிந்தியர்கள் தன்னைப்போல் பிறர் நலனை நாடும்படி 1 கொரி 11:1 இல் கூறுகிறார். ஆனால், கலாத்திய விசுவாசிகளிடம், சிறிது மாற்றத்தோடு பேசுகிறார்.

கலா 4:12 இல், தன்னைப்போல் நடக்கும்படி அவர் கலாத்தியரிடம் சொல்லவில்லை; மாறாக, தன்னைப்'போலவே' மாறும்படி கூறுகிறார். அது ஏன்? கொரிந்திய சபையினரிடம் காணப்பட்டதுபோல், மோசமான நடத்தையோ பக்தியற்ற வாழ்க்கையோ கலாத்தியரிடம் காணப்படவில்லை; கிறிஸ்தவத்தின் அடிப்படை நியதியிலேயே தவறியிருந்தார்கள். எனவேதான், என்னைப்போல் நடந்துகொள்ளுங்கள் என்று சொல்லாமல், என்னைப் போல் ஆகுங்கள் என்கிறார் பவுல். அப் 26:29 இல், இரண்டாம் ஏரோது எனப்படும் அகிரிப்பாவிடம் பேசும்போதும், கலா 4:12 இன் அதே வார்த்தையைத்தான் பவுல் பயன்படுத்துகிறார். 'நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறைய மாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலகும்படி தேவனை வேண்டிக்கொள்கிறேன்' என்று சொன்னார் பவுல். அப் 26:29. அதாவது, தன்னுடைய கிறிஸ்தவ அனுபவமானது, கிறிஸ்துவில்மாத்திரமே அடித்தளம் கொண்டிருப்பதையும், நியாயப்பிரமாண கிரியைகளை நம்பாமல், கிறிஸ்து தனக்காகச் செய்ததை நம்பி, தன் விசுவாசம் அமைந்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார். கலாத்தியரோ கிறிஸ்துவில் தங்களைக் காணாமல், தங்கள் நடத்தைகளைப் பெரிதாக நினைத்தார்கள்.

கலாத்தியர் எவற்றிலெல்லாம் தன்னைப்போல் ஆகவேண்டுமென்று பவுல் எதையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை; ஆனால், தன் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் அவர்கள் தன்னைப் போலாக அவர் சொல்லியிருக்க வாய்ப்பில்லை. கலாத்தியர் நியாயப்பிரமாணத்தை முக்கியப்படுத்தினார்கள். எனவே, இயேசுவில் தான் கண்டுகொண்ட அன்பையும் சந்தோஷத்தையும் விடுதலையையும் இரட்சிப்பின் நிச்சயத்தையும் அவர்கள் கண்டுகொள்வதையே அவர் விரும்பியிருக்கவேண்டும். கிறிஸ்துவை அறியும் மேன்மைக்காக, சகலத்தையும் குப்பையாக எண்ணியதாக பவுல் கூறுகிறார். பிலி 3:5-9. கலாத்தியரும் அதேவித அனுபவத்தைப் பெறும்படி அவர் ஏங்கியிருக்க வேண்டும்.

இயேசுவைத்தவிர வேறு யாரையாவது நல்லதொரு முன்மாதிரியாகக் கருதுகிறீர்களா? அந்த நபரிடம் காணப்படும் நல்ல குணங்கள் யாவை? அதே குணங்களை எவ்வாறு நீங்களும் உங்கள் வாழ்க்கையில் வெளிப்படுத்த முடியும்?

## நான் உங்களைப் போல் ஆனேன்

**கலா 4:12 இன் பிற்பகுதியில் பவுல் சொல்வதை நன்கு அறிய, 1கொரி 9:19-23 வசனங்கள் எவ்வாறு உதவுகின்றன? அப் 17:16-34; 1 கொரி 8:8-13; கலா 2:11-14.**

பவுல் ஏற்கெனவே கலாத்தியரைப் போல் மாறியிருந்தால், இவர்கள் ஏன் அவரைப் போலாக வேண்டும்? கலா 4:12 சற்றுக் குழப்பமாகத் தோன்றலாம்.

'இரட்சிப்பதற்கு கிறிஸ்து போதுமானவர்' என்று முற்றிலுமாக நம்புவதிலும் விசுவாசிப்பதிலும் கலாத்தியர் தன்னைப் போலாகும்படி பவுல் விரும்பினார். ஆனால், அவர்கள் மத்தியிலிருந்த புறஜாதியாருக்குச் சத்தியம் சொல்லும்படி, தான் ஒரு யூதனாயிருந்தும், 'நியாயப்பிரமாணமில்லாத' ஒரு புறஜாதியானாக மாறினார். அதைத்தான், தான் அவர்களைப் போல் ஆனதாகக் குறிப்பிடுகிறார். புறஜாதியாருக்கான நற்செய்தியாளர் அவர். புறஜாதியாருக்கும் யூதருக்கும் நற்செய்தியைப் பிரசங்கிக்கும் விதத்தை அவர் அறிந்திருந்தார். ஒரே நற்செய்தியைத் தான் பவுல் பிரசங்கித்தார்; ஆனால், மக்களுக்குத் தகுந்தபடி அவர் பிரசங்கிக்கும் விதம்தான் மாறுபட்டது. 1கொரி 9 :19-23.

'சுவிசேஷம் யாருக்கு அறிவிக்கப்படுகிறதோ அந்த மக்களின் சூழ்நிலையை முழுவதும் அறிந்து, அதை அறிவிக்கவேண்டியது அவசியம். சூழ்நிலைக்கு தகுந்தபடி பேசுவதில் பவுல்தான் முன்னோடி.' - டிமோதை ஜார்ஜ்.

சூழ்நிலைக்குத் தகுந்தபடி நற்செய்தியைப் பிரசங்கிப்பதில் ஒரு வரம்பும் உண்டென்று 1 கொரி 9:21 இல் பவுல் சுட்டிக்காட்டுகிறார். யூதரையும் புறஜாதியாரையும் வெவ்வேறு விதங்களில் அணுகுவதற்கு ஒருவருக்குச் சுதந்தரமுண்டு. அதற்காக, நியாயப்பிரமாணத்திற்குப் புறம்பாக வாழ்வதற்கு அவருக்கு உரிமை கிடையாது. ஏனெனில், கிறிஸ்தவர்கள்'கிறிஸ்துவின் பிரமாணத்திற்கு' உட்பட்டிருக்கிறார்கள்.

கலாச்சாரத்தையும் தாண்டி, நற்செய்தியின் சாராம்சத்தைப் பிரித்துப்பார்க்கத் தெரியாத வரையிலும் சூழ்நிலைக்குத் தகுந்தபடி பேசுவது ஒருபோதும் எளிதாகாது. கிறிஸ்துவைக் குறித்த நற்செய்தியில் சமரசமாகாமல், சூழ்நிலைக்குத் தகுந்தபடி அதை அறிவிப்பதில் நாமும் பவுலின் முன்மாதிரியையே பின்பற்றவேண்டும்.

எளிதில் சமரசமாகி விடுகிறோமல்லவா? நெடுநாள் கிறிஸ்தவர்கள்தாம் எளிதில் சமரசமாகியும் விடுகிறார்கள். உங்கள் வாழ்க்கையில் எதிலெல்லாம் நீங்கள் சமரசமாகியிருக்கிறீர்கள்? என்ன வழிகளிலெல்லாம் அதை நியாயப்படுத்தியும் இருக்கிறீர்கள்? அவற்றிலிருந்து நீங்கள் எவ்வாறு மீண்டும் விடுதலையடையலாம்?

பவுலுக்கும் கலாத்தியருக்கும் இருந்த உறவில் எப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது சிக்கல் ஏற்பட்டிருந்தது. கலாத்தியருக்கு முதன்முதலில் பவுல் நற்செய்தியை அறிவித்தபோது, அவர்கள் தன்னை நடத்தினவிதம்பற்றி பவுல் புகழ்கிறார். இப்போது நிகழ்ந்தது என்ன?

***கலாத்தியாவில் பவுல் நற்செய்தியைப் பிரசங்கிக்கக் காரணமாயிருந்த நிகழ்வு எது? கலா 4:13.***

---

கலாத்தியாவில் நற்செய்தியைப் பிரசங்கிப்பது முதலில் பவுலின் திட்டமாக இல்லை. பிரயாணத்தின்போது அவர் நோய்வாய்ப்படுகிறார். எனவே, சிகிச்சை பெற அவர் கலாத்தியாவுக்குச் செல்ல நேரிடுகிறது. அவர் மலேரியாவால் பாதிக்கப்பட்டிருக்கலாமென்று சிலர் கூறுகிறார்கள்; கலாத்தியரிடம் கேட்டிருந்தால் தங்கள் கண்களையும் பிடுங்கித் தனக்குக் கொடுத்திருப்பார்களென்று அவர் குறிப்பிடுவதால், அவருக்குக் கண்பார்வைக் கோளாறு இருந்திருக்கலாமென்றும் ஒரு கருத்து நிலவுகிறது. 2 கொரி 12:7-9 இல், 'என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது' என்று அவர் கூறுவதால், அதுபற்றிய நோயாகவும் இருக்கலாம்.

நோய் எதுவானாலும், கலாத்தியரைச் சோதிக்கும்படி அது அமைந்ததாக பவுல் கூறுகிறார். தேவ கோபத்தால்தான் வியாதிவருவதாக அன்றைய உலகத்தார் நம்பினார்கள். யோவான் 9:1,2; லூக் 13:1-4. பவுலின் நோயைக் காரணங்காட்டி, அவரையும் அவருடைய செய்தியையும் கலாத்தியர் புறக்கணித்திருக்கலாம். ஆனால், அவர்கள் பவுலை முழுமனதோடு ஏற்றுக்கொண்டார்கள். ஏனெனில், சிலுவையைப்பற்றின அவருடைய செய்தியும், பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதலும் அவர்களுடைய உள்ளங்களில் அனல்மூட்டியது. கலா 3:1. இப்போது அந்த மனநிலை மாறியதற்கு அவர்கள் என்ன காரணம் சொல்லமுடியும்?

***பவுல் வியாதிப்படுவதற்கு என்ன காரணங்களுக்காக தேவன் அனுமதித்திருப்பார்? தான் அவதிப்பட்டு வந்த நிலையிலும், பிறருக்கு ஊழியஞ்செய்ய பவுலால் எவ்வாறு முடிந்தது? ரோமர் 8:28; 2கொரி 4:7-12; 12:7-10.***

தேவனைக் குறைசொல்லவும், நற்செய்தியைப் பிரசங்கிக்காமல் செல்லவும் அந்த இக்கட்டான சூழ்நிலையை அவர் எளிதில் காரணங்காட்டியிருக்கலாம். பவுல் அப்படிச் செய்யவில்லை. தான் ஒரு சூழ்நிலைக் கைதியாகிவிடுவதற்குப் பதிலாக, தேவகிருபையை முற்றிலும் சார்ந்திருப்பதற்கு ஒரு தருணமாக அதைப் பயன்படுத்தினார். 'வியாதி, உபத்திரவம், வறுமை, இயற்கை அழிவுகள், சொல்லொண்ணா துயரங்கள் போன்று வாழ்க்கையில் மோசமான நிகழ்வுகள் ஏற்பட்டால், தம் கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிற தருணங்களாக தேவன் அவற்றைப் பயன்படுத்துகிறார்.' - டிமோதை ஜார்ஜ்.

உங்களுக்கு ஏற்படும் உபத்திரவங்களிலும் சோதனைகளிலும் நீங்கள் அதிகமாக தேவனைச் சார்ந்திருக்க என்ன செய்யலாம்? இல்லையேல், அதற்கு ஏதாவது மாற்றுவழிகள் வைத்திருக்கிறீர்களா?

## உண்மையைச் சொல்லுதல்

***கலா 4:16 இல், பவுல் வலியுறுத்தும் கருத்து என்ன? என்ன வழிகளிலெல்லாம் இதே போன்ற அனுபவம் உங்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது? யோவான் 3:19; மத் 26:64,65; எரே 36:17-23.***

---

---

இன்றைய காலக்கட்டத்தைப் பொறுத்தவரையிலும் 'உண்மையைச் சொல்லுதல்' என்பது எதிரிகளை ஒழித்துக்கட்ட, முன்பின் யோசிக்காமல், தங்குதடையின்றி, வருத்தகரமான, விரும்பத்தாக உண்மைகளை சொல்கிற செயலாகக் கருதப்படுகிறது. கலா 4:12-20; 6:9,10 போன்ற பகுதிகளில் பவுலின் அன்பைக் காணமுடிகிறது; இல்லையெனில், அன்பைவிட பவுலுக்குச் சத்தியத்தைச் சொல்வதுதான் முக்கியமானதாய் இருந்தது எனும் முடிவுக்கு நாம் வரநேரிடும். கலாத்தியர் 'சுவிசேஷத்தின் சத்தியத்தை' அறியவேண்டுமென்று பவுல் விரும்பியதற்கு அவர்கள்மேல் அவர் கொண்டிருந்த அன்புதான் காரணம். கலா 2:5,14. சத்தியத்தைக் கேட்க விரும்பாதவர்களிடம், ஒளிவு மறைவுவின்றிப் பேசுவதும், அவர்களைக் கடிந்து கொள்வதும் எவ்வளவு வேதனையான ஓர் அனுபவமென்பது எல்லாருக்கும் தெரியும். நாம் சத்தியத்தைச் சொல்கிறோம்; மற்றவர்களை வேதனைப்படுத்துவதற்காக அல்ல. அவர்களுக்கு முதலில் வேதனை ஏற்பட்டாலும், இறுதியில் அவர்களுக்கு நன்மை ஏற்படும் என்பதற்காகவே சொல்கிறோம். பிறர் கேட்க விரும்பாவிட்டாலும், அதை அவர்கள் கேட்டால்தான் அவர்களுக்கு நன்மை என்பதால் சொல்லுகிறோம்.

***தான் எதிர்ப்பவர்கள் குறித்து கலா 4:17-20 இல் பவுல் சொல்வது என்ன? அவர்கள் சொன்ன பொய்ப்போதகத்தோடு வேறு எதையும் பவுல் எதிர்த்தார்?***

---

---

கலாத்தியரின் கோபத்திற்கு ஆளாக நேரிடுகிற ஆபத்து இருந்தபோதிலும், பாரபட்சமின்றி அவர்களுக்கு நற்செய்தியை அறிவித்தார் பவுல். ஆனால் அவருடைய எதிரிகளோ கலாத்தியரின் தயவைப்பெற மும்முரமாகச் செயல்பட்டார்கள். கலாத்தியர் மேலிருந்த அன்பினால் அல்ல; சுயநல நோக்கங்களுக்காக அப்படிச் செய்தார்கள். அவர்கள் 'உங்களைப் புறம்பாக்க விரும்புகிறார்கள்' என்று அவர் எதைக் குறிப்பிடுகிறாரென்று தெரியவில்லை. கலாத்தியர் விருத்தசேதனம் பெறும் வரை அவர்களை நற்செய்திக்குப் புறம்பாக்க எதிரிகள் முயன்றதையே அவர் சுட்டிக்காட்டியிருக்கலாம்.

தேவையான நேரத்தில் உண்மையைப் பேசியிருப்பீர்கள்; ஆனாலும் பிறர் உங்கள் மேல் கோபப்படும் சூழ்நிலை உருவாகும். அதுபோன்ற அனுபவம் உங்களுக்கும் ஏற்பட்டதுண்டா? இதே போன்ற அனுபவம் மீண்டும் ஏற்படும்போது, உங்களுக்கு உதவும் விதத்தில் இந்த அனுபவத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டது என்ன?

“கலாத்தியச் சபைகளில் சுவிசேஷச் செய்தியை தீமையான காரியங்கள் அகற்றிக்கொண்டிருந்தன. யூதமார்க்கத்தில் வழக்கற்றுப்போன சடங்காச்சாரங்களைப் பிடித்துக்கொண்டு, விசுவாசத்தின் மெய் அடித்தளமான கிறிஸ்துவைப் புறக்கணித்தார்கள். கலாத்தியரைச் சீர்கெடச்செய்த ஆபத்தான செல்வாக்குகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு, உறுதியான நடவடிக்கைகளும், கடுமையான எச்சரிப்புகளும் அவசியமென்று உணர்ந்தார் பவுல். தேவ ஊழியர்கள் தாங்கள் பிரயாசப்படுகிறார்களின் நலனுக்காக, அவர்களுடைய சூழ்நிலைக்குத் தகுந்தபடி மாறக் கற்றுக்கொள்வது முக்கியம். கனிவு, பொறுமை, தெளிவு, உறுதி போன்றவை அவசியம்தான்; ஆனால், சமயோசித புத்தியோடு இவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும். தேவ வல்லமையை ஏற்கனவே தங்கள் வாழ்வில் அறிந்தவர்களிடம் பவுல் மன்றாடுகிறார்; நற்செய்தியின் சத்தியத்தில் ஆதியில் வைத்திருந்த அன்புக்குத் திரும்பும்படி வேண்டுகிறார். ஆண்களும் பெண்களும் கிறிஸ்துவுக்குள் சுதந்தரராவதின் சிலாக்கியத்தை யாரும் கேள்விகேட்க முடியாத அளவிற்கு ஆணித்தரமாகப் பேசுகிறார். ஏனெனில், கிறிஸ்துவிடம் முற்றிலும் சரணடைவோர் அவருடைய பாவநிவாரணக் கிருபையின் மூலம் அவருடைய நீதியின் வஸ்திரம் தரிக்கப்படுகிறார்கள். இரட்சிக்கப்படும் ஒவ்வோர் ஆத்துமாவும் தேவ விஷயங்களில் மெய்யான, தனிப்பட்ட அனுபவத்தைப் பெறுவதற்கு அவர் காரணரானார்.

“அப்போஸ்தலனின் ஊக்கமான வேண்டுகோள் வீணாகப்போகவில்லை. ஆவியானவர் மிகுந்த வல்லமையோடு செயல்பட்டார்; மாறுபாடான வழிகளில் திரிந்த அநேகரின் பாதங்கள், தாங்கள் முன்பு நடந்த நற்செய்தியின் விசுவாசப் பாதைக்கே திரும்பின. தேவன் அவர்களுக்குத் தந்த விடுதலையின் சுதந்தரத்தில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள்.” – *AA, p.385,386,388.*

# கலந்துரையாடக் கேள்விகள்

1. *நம்முடைய உபத்திரவத்தை எவ்வாறு தேவன் பயனுள்ளதாக மாற்றமுடியும்? உபத்திரவப்பட்டும் நன்மையில்லாததுபோல் தோன்றும் சூழ்நிலைகளை நாம் எவ்வாறு அணுகவேண்டும்?*

2. *கிறிஸ்து நமக்குள் உருவாகுவது என்றால் என்ன? நடைமுறை வாழ்வில் இதன் அர்த்தம் என்ன? இது நம்மில் நிகழ்வதை எவ்வாறு உணரலாம்? நாம் நினைப்பதுபோல் உடனடியாக இந்த மாற்றம் நம்மில் நிகழாவிட்டாலும், நாம் அதைரியமடையாதிருப்பது எப்படி?*

**பாடச்சுருக்கம்:** *விளக்கமாகவும் விரிவாகவும் வேதாகம விஷயங்களைக் கலாத்தியரிடம் பேசின பவுல், இப்போது தனிப்பட்ட விதத்தில், உணர்ச்சிகரமாக அவர்கள் முன் ஒரு வேண்டுகோளை வைக்கிறார். ஓர் ஆவிக்குரிய தந்தையாக அவர்கள் மேல் தனக்கு உண்மையான அன்பும் அக்கறையும் இருப்பதைச் சுட்டிக்காட்டி, தன்னுடைய ஆலோசனைக்குச் செவிகொடுக்குமாறு மன்றாடுகிறார்.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.

அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.